பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 15 சனிக்கிழமை 31.07.2021 கதிர் 134

## கொரோனாச் சட்டத்தை மீறிய 52,719 பேர் கைது!

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 93 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

அதன்படி, தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த

☞ 2

# மாகாணங்களுக்கிடையிலான பொதுப்போக்குவரத்து ஆரம்பம்

## நாளை முதல் காலை, மாலை நேரங்களில்



**மாகாணங்களுக்கு இடையிலான பொதுப்போக்குவரத்து சேவைகள் நாளை முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.**

**எனினும், ஆரம்பகட்டமாக காலை மற்றும் மாலை நேரங்களில் மட்டுமே பொதுப்போக்குவரத்து சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.**

☞ 2

## மூன்றரை வயது சிறுவனும் கொரோனாத் தொற்றால் பலி

மஸ்கெலியா சுகாதார அத்தியட்சகர் பிரிவில் மூன்றரை வயது சிறுவன் ஒருவன் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

ஸ்டீபன் அபிஷேக் என்ற சிறுவனே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

கடந்த 29ஆம் திகதி இவர் சுகவீனமுற்ற நிலையில் மஸ்கெலியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அங்கு சிகிச்சை அளிக்கும்போது சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

## ஹிஷாலினிக்கு நீதி கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த சிறுமி ஹிஷாலினியின் மர்ம மரணத்துக்கு நீதி கோரி வவுனியாவில் இன்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டம் மகளிர் அமைப்பினரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, நாட்டில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளன.

☞ 2

## பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபருடன் இணைந்தே பொலிஸார் அட்டகாசம்!

பொதுமகன் ஒருவருடனான நட்பின் அடிப்படையிலேயே கோப்பாய் பொலிஸார் கடந்த சில தினங்களாக மனித உரிமை மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

கடந்த வியாழக்கிழமை ஹயஸ் ரக வாகனத்தில் வந்த பொலிஸ் சீருடை மற்றும் சிவில் உடையில் இருந்த கும்பல் ஒன்று இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்று சித்திரவதை புரிந்து கைத்துப்பாக்கியால் தாக்கி வீதியில் வீசி விட்டுச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட

☞ 2

## சிறுமியின் மரணத்தை மறைக்க முயற்சித்த பொலிஸ் அதிகாரி?

### விசேட விசாரணைகள் ஆரம்பம்

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்து வந்த நிலையில், தீக்காயங்களுடன் மர்மமாக உயிரிழந்த ஹிஷாலினியின் மரணத்தை மறைப்பதற்காக, சிறுமியின் குடும்பத்தாருக்கு அழுத்தங்களைப் பிரயோகித்ததாகக் கூறப்படும் பொலிஸ் தலைமையகத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவரைக் கைது செய்ய விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மிக முக்கியமானவர்கள். அவர்கள் இவ்வாறு செய்யமாட்டார்கள். இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்து கொண்டு செல்லத் தேவையில்லை.

☞ 2

## சிங்கள நடிகை விபத்தில் சாவு!





நுவரெலியா - தலவாக்கலை வீதியில் லிந்துலை பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பிரபல சிங்கள நடிகை ஹயாசிந்த் விஜேரத்ன உயிரிழந்துள்ளார்.

அவர் பயணித்த வாகனம் நேற்றிரவு பள்ளம் ஒன்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

☞ 2

## தவறிழைத்த பொலிஸாருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்



**(இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நல்லிணக்கத்தையும் அமைதியையும் ஏற்படுத்தும் வகையில் பொலிஸார் கடமையாற்றும் அதே வேளை, ஒரு சில பொலிஸ் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் பணத்துக்காக வன்முறைகளில் ஈடுபடுகின்றமையை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கப்படும்.

- இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகே தெரிவித்தார்.

கோப்பாய் பகுதியில் இளைஞர் ஒருவரை வானில் கடத்திச் சென்று

☞ 2

## வீதியில் மயங்கி சரிந்தவர் மரணம் கொரோனாத் தொற்றும் கண்டறிவு

**(இ.கலையமுதன்)**

வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த முதியவர் திடீரெனத் தடுமாறி வீதியோரம் வீழ்ந்த நிலையில் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்பு உயிரிழந்துள்ளார். அவருக்கு கொரோனாத் தொற்று உள்ளது எனப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

சுதுமலை மற்றும் உரும்பிராயை வதிவிடமாகக் கொண்ட 63 வயதுடையவரே இவ்வாறு இன்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உறவினர் ஒருவரைப் பார்வையிட்டு நேற்று மதியம் 1.45 மணியளவில் அவர் வீடு திரும்பியுள்ளார்.

☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



## சிறுமியின் மரணத்தை மறைக்க ...................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பிரச்சினையைப் பொலிஸுக்குக் கொண்டு செல்ல வேண்டிய தேவையில்லை. 50 ஆயிரம் ரூபாவை வாங்கித் தருகின்றேன். இந்தப் பிரச்சினையை இதனுடன் நிறுத்திக்கொள்வோம் என்று குறித்த பொலிஸ் உத்தியோகத்தர், சிறுமியின் குடும்பத்தாருக்கு அழுத்தங்ளைப் பிரயோகித்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த உயிரிழப்பு மர்மமான உயிரிழப்பு என வாக்குமூலம் வழங்காது, தற்கொலை எனக் கருதி, இந்தப் பிரச்சினையை முடித்துக்கொள்ளும் வகையில், சிறுமியின் சகோதரன் உள்ளிட்ட சிறுமியின் குடும்பத்தாருக்குக் குறித்த பொலிஸ் அதிகாரி அச்சுறுத்தல் விடுத்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

சிறுமி உயிரிழந்த பின்னர், சிறுமியின் சகோதரன் உள்ளிட்ட உறவினர்களால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட வாக்குமூலத்தில் இந்த விடயம் தொடர்பான தகவல்கள் வெளியாகியிருந்தன.

இவ்வாறான பின்னணியில், குறித்த சம்பவம் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விசாரணைகளில், பொலிஸ் தலைமையகத்தில் பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டராகப் பணிபுரியும் பொலிஸ் அதிகாரியாலேயே இந்த அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இந்தப் பொலிஸ் அதிகாரியின் தொலைபேசி அறிக்கை தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது எனவும், எதிர்வரும் தினங்களில் சந்தேகநபரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

ரிஷாத் பதியுதீனின் பிரத்தியேக பாதுகாப்பு அதிகாரியாக குறித்த பொலிஸ் அதிகாரி சிறிது காலம் பணிபுரிந்து வந்துள்ளார் என்றும், ரிஷாத்தின் உறவினர்களுடன் இவர் நெருங்கிய தொடர்பைப் பேணி வந்துள்ளார் என்றும் தெரியவருகின்றது.

ஹிஷாலினிக்குத் தீக்காயங்கள் ஏற்பட்ட பின்னர், குறித்த பொலிஸ் அதிகாரிக்கு, ரிஷாத் பதியுதீனின் மனைவியின் தந்தை தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு விடயங்களை தெரிவித்துள்ளார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதன்பின்னர், குறித்த பொலிஸ் அதிகாரி, ரிஷாத் பதியுதீனின் வீட்டுக்குச் சென்று விடயங்களை ஆராய்ந்துள்ளமையும் விசாரணைகளில் வெளியாகியுள்ளது.

அதையடுத்தே குறித்த பொலிஸ் அதிகாரி, ஹிஷாலினியின் உறவினர்களுடன் பேசி, அழுத்தங்களைப் பிரயோகித்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

சாட்சியாளர்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்தல், இலஞ்சம் வழங்க முயற்சித்தமை உள்ளிட்ட மேலும் பல குற்றச்சாட்டுக்களின் கீழ், குறித்த பொலிஸ் உத்தியோகத்தரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் கண்காணிப்பின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## தவறிழைத்த .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு சிலரின் தேவைக்காகப் பணத்தைப் பெற்று பொலிஸார் செயற்பட்டிருந்தால் அவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கப்படும். அத்துடன், குற்றச்சாட்டு எழுந்துள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உடனடியாக இடமாற்றம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டுமல்ல நாடு முழுவதும் அமைதியையும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பப் பொலிஸார் தமது கடமையைச் செய்துவரும் நிலையில் இவ்வாறான சில பொலிஸ் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் தவறான வகையில் செயற்படுகின்றமை வருந்தத்தக்கது - என்றார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவில் கடந்த வியாழக்கிழமைஹயஸ்ரகவாகனத்தில் வந்த பொலிஸ் சீருடை மற்றும் சிவில் உடையில் இருந்த கும்பல் ஒன்று இளைஞன் ஒருவரைக் கடத்தி சென்று சித்திரவதை புரிந்து கைத்துப்பாக்கியால் தாக்கி வீதியில் வீசிவிட்டுச் சென்றது.

அந்தச் சம்பவத்தில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளமை தொடர்பில் தாக்குதலுக்குள்ளான இளைஞரால் யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீதியில் மயங்கி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் சிவலிங்கப் புலியடியச் சந்தியில் பயணித்தபோது, அவர் திடீரென வீதியில் மோட்டார் சைக்கிளில் சரிந்து வீதியோரத்தில் வீழ்ந்துள்ளார். அவலக் குரல் எழுப்பிய அவரை அந்தப் பகுதியைச் சேர்ந்தோர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

அவருக்கு உடனடியாக முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனா நோய்த்தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அவர் இன்று அதிகாலை 1.25 மணியளவில் உயிரிழந்தார் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

சடலம் சுகாதார விதிமுறைகளின் கீழ் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் மயானத்தில் மின்தகனம் செய்யப்படவுள்ள நிலையில் அவரது உறவினர்கள் ஐவர் அழைக்கப்பட்டுள்ளனர்.

## சிங்கள நடிகை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் விபத்துக்களில் 12 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனாச் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒக்டோபர் மாதம் முதல் இதுவரை 52 ஆயிரத்து 719 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பயணக் கட்டுப்பாடுகளை மீறி மாகாண எல்லைகளைக் கடக்க முயன்ற 284 நபர்கள் நேற்று திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

## பிடியாணை பிறப்பிக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இளைஞரைக் கடத்தப் பயன்படுத்தப்பட்ட வாகனமானது 56 - XXXX இலக்க வாகனம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அது தொடர்பில் மேலும் தெரியவருவதாது -

உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த குறித்த வாகன உரிமையாளர் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் நீதிமன்றில் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், வழக்குத் தவணைகளுக்குச் செல்லாத நிலையில் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்நபர் கோப்பாய் பொலிஸா ருடன் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளார்.

குறித்த நபர் தனது நண்பர்களுடன் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குப் பின்புறமாக உள்ள வீடொன்றில் பொலிஸாருடன் மது விருந்துக்களில் கலந்து கொள்வார்.

பின்னர் மது அருந்திவிட்டு தனது வாகனத்தில் பொலிஸாரை அழைத்துக் கொண்டு உரும்பிராய் பகுதிக்குச் சென்று வீதிகளில் நிற்கும் இளைஞர்கள், தலைக்கவசம் அணியாது செல்வோர் என்பவர்களை வழிமறித்து பொலிஸார் வாகனத்தில் இருக்க வாகன உரிமையாளரும், அவரது நண்பர்களும் இறங்கி தம்மை சிவில் உடை தரித்த பொலிஸார் எனக் கூறி அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்வார்கள்.

அத்துடன் தனது நண்பர்கள், தனக்குத் தேவையானோருடன் முரண்பட்டுக் கொண்ட நபர்களின் வீடுகளுக்கு மது போதையில் வாகனத்தில் பொலிஸாரை அழைத்துச் சென்று, அவர்களைத் தாக்குவது, மிரட்டுவது போன்ற வேலைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த வியாழக் கிழமைகோப்பாய்பொலிஸ்நிலையத்துக் குப் பின்புறமாக உள்ள வீடொன்றில் மது விருந்து நடைபெற்றுள்ளது. வீட்டு உரிமையாளர் பொலிஸாரின் மது விருந்துக்கு வீட்டை வழங்கி வருகின்றார்.

குறித்தவீட்டில்பொலிஸ்சீருடையுடன் கடமை நேரத்தில் சென்று மது அருந்தி விட்டே வாகனத்தில் சென்று இளைஞரைக் கடத்தித் தாக்கியுள்ளனர்.

இதேவேளை, குறித்த இளைஞரை வாகனத்தில் கடத்திச் சென்று தாக்கும் போது ஏற்கனவே செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரையும் வாகனத்தில் கடத்தி தாக்கிய நிலையில் வாகனத்தில் காணப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் இத்தகைய செயற்பாடுகள் குறித்தும், கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குப் பல தடவைகள் தெரியப்படுத்திய போதிலும் அவர் அது தொடர்பில் கண்டுகொள்ளாது இருந்தார் எனவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

குறித்த இளைஞர் தாக்குதலுக்குள்ளான நிலையில் நேற்று யாழ். மனித உரிமைஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தமை தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்த நிலையிலும் நேற்றிரவு குறித்த நபருடன் பொலிஸார் மது விருந்தில் கலந்துகொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கடந்த ஒரு வார கால பகுதிக்குள் கோப்பாய் பொலிஸாரினால் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று மனித உரிமை ஆணைக்குழுவுக்கு நான்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவை நான்கும் உரும்பிராய் பகுதிகளைச் சேர்ந்தவர்களால் வழங்கப்பட்ட முறைப்பாடாகும்.

இந்தக் குழுவினரே அவ்வாறு மனித உரிமை மீறலில் ஈடுபட்டு இருந்திருக்கலாம் எனும் சந்தேகம் எழுந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகள் நீதியான விசாரணைகளை முன்னெடுத்துப் பொலிஸ் திணைக்களத்துக்குக் களங்கம் ஏற்படுத்தும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்குக் எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சக பொலிஸ் உத்தியோகஸ்தர்களே எதிர்ப்பார்த்துள்ளனர்.

## ஹிஷாலினிக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் மரணமடைந்த ஹிஷாலினியின் மரணத்துக்குக் காரணமானவர்கள் உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு, உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

மேலும், சிறுமிகள், பெண்கள் மீதான, துஷ்பிரயோகச் சம்பவங்கள் நாட்டில் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், நாட்டின் பெண்களுக்கான பாதுகாப்பு கேள்விக்குறியாகவுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஹிஷாலினியின் மரணத்துக்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுதண்டனைபெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். எமது நாட்டின் பெண்கள் சுய கௌரவத்துடன் பாதுகாப்பாக வாழும் சூழ்நிலையை அரசு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, எதிர்வரும் காலங்களில் இவ்வாறான துஷ்பிரயோக சம்பவங்கள் தடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

## மாகாணங்களு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் கொரோனாப் பரவல் மிகவும் கடுமையாகப் பரவி வருகின்றது எனச் சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளதையடுத்து, பகல்நேர பொதுப் போக்குவரத்து சேவைகளை இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில், சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைவாக பஸ் மற்றும் ரயில் சேவைகளை நாளை முதல் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி (திங்கட்கிழமை) முதல் அனைத்து அரச ஊழியர்களும் பணிக்கு அழைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்குச் சேவைகளை வழங்க பொதுப்போக்குவரத்துச் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய பஸ்களின் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மட்டும் பயணிகளைக் கொண்டு செல்லுமாறு இலங்கை போக்குவரத்து சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, தனியார் பஸ்களும் நாளை முதல் போக்குவரத்தில் ஈடுபடவுள்ளன என்றும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம மேலும் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## வேண்டாம் அவசர முடிவு

கொரோனாவைக் கட்டுப்படுத்தி வாழ்வது என்பதிலும் விட கொரோனாவுடன் வாழ்தல் என்ற முடிவுக்கு அரசுத் தலைமை வந்து விட்டதாகவே தோன்றுகிறது.

ஒருபுறம் கொரோனாப் பரவல் தடுப்புத் தொடர்பான சில கட்டுப்பாடுகள் நீடிக்கின்றன. வேறு சில தளர்த்தப்பட்டுள்ளன. ஒன்றுக்கொன்று முரணான போக்குகள் கட்டவிழ்கின்றன.

அனைத்துப் பாடசாலைகளும் இன்னும் திறக்கப்படவில்லை. உயர்கல்வி நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும் பெரும்பாலும் மூடப்பட்டிருக்கின்றன. ஆனால் நாளையிலிருந்து இதுவரை மூடப்பட்டு இருந்ததாகக் கூறப்படும் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து திறந்துவிடப்படுகிறது.

மறுபக்கத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் அரசு ஊழியர்கள் அனைவரும் வழமைபோன்று கடமைக்கு சமூகமளிக்க வேண்டும் என்று பொத்தம் பொதுவில் ஓர் உத்தரவு வந்திருக்கிறது. மட்டுப்படுத்தப்பட்ட பணிக்குழாமினரை சுழற்சி முறையில் சேவைக்கு அழைத்தல் மற்றும் வீடுகளில் இருந்தவாறு சேவைகளை மேற்கொள்ளுதல் தொடர்பில் வெளியிடப்பட்ட அனைத்து சுற்றறிக்கைகளும் இடைநிறுத்தப்படுகின்றன என்று ஜனாதிபதியின் செயலாளர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

கொரோனாத் தாக்கத்தின் விபரீதத்தை கணக்கில் எடுக்காமல் 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற பாணியில் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதோ என்று தோன்றுகின்றது.

இந்தக் கொரோனாப் பேரிடர் காலத்திலும் மட்டுப்படுத்தப்பட்ட பணிக் குழாமினரை சுழற்சி முறையில் பயன்படுத்துதல் மற்றும் வீட்டில் இருந்தவாறு சேவையாற்றுதல் முறைமைகளின் கீழ் பல அரச திணைக்களங்கள் மக்கள் தேவையை நிறைவு செய்யும் அளவுக்கு பணியாற்றி வந்துள்ளன என்பது மறுக்க கூடியதல்ல. எனவே சம்பந்தப்பட்ட அரசு நிறுவனத்தின் சேவை, தேவை, இயலுமை, முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படை யிலும் முன்னுரிமை ரீதியிலும் நிறுவனத் தலைவரே இத்த கைய விடயங்களில் நிலைமைகளை ஆராய்ந்து தீர்மானம் எடுக்கும் விதத்தில் அரசு ஒரு முடிவை செய்திருக்கலாம்.

அதை விடுத்து எல்லோருக்கும் பொதுவாக ஒரு தீர்மானத்தை எடுத்து அறிவிப்பது பொருத்தமற்ற விடயமாகவே தோன்றுகின்றது.

ஒருபுறம் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் பலவும் மூடப்பட்டிருக்கின்றன. மறுபுறம் அனைத்து அரச ஊழியர்களும் நாளை மறுதினம் முதல் பணிக்குத் திரும்பவேண்டும் என்று அறிவுறுத்தல் விடுக்கப்படுகிறது. மூடப்பட்டிருக்கும் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், கல்விப் பணி சாரா ஊழியர்கள், இயங்காத பல்கலைக்கழகங்களில் ஊழியர்கள் எல்லோரும் நாளை மறுதினம் முதல் பணிக்குத் திரும்ப வேண்டுமா என்ற கேள்வி அரசின் இப்போதைய அறிவிப்பினால் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் குறிப்பிடத்தக்க வீதமானோருக்குக் கொவிட் தடுப்பூசி ஏற்றி விட்டோம், ஆகவே நாட்டை திறந்து விடலாம் என்ற அடிப்படையில் கண்மூடித்தனமாக ஒரு முடிவு எடுக்கப்பட்டு அதனடிப்படையில் இப்படி ஊழியர்களைப் பணிக்கு திரும்புமாறு சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டு இருக்கின்றனவோ என்னவோ தெரியவில்லை. ஆனால் இந்தத் தடுப்பூசி ஏற்றப்பட்டவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்படாது என்பது அல்ல என்பதையும் –

தடுப்பூசி ஏற்றியவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட வாய்ப்புண்டு, தொற்று ஏற்பட்டால் அதை எதிர்க்கும் சக்தி அவர்களுக்கு இருக்கும், அதனால் பாதிப்பு வலிமையாக இருக்காது, ஆனால் அவர்கள் தொடர்ந்து தொற்றுக் காவிகளாக இருப்பார்கள் என்பதையும் –

நாம் மறந்துவிடக்கூடாது. கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆகையினால் நாட்டில் கணிசமானோருக்குத் தொற்றுத் தடுப்பூசி அளித்து விட்டோம், எனவே கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, நாட்டை முழுச் செயற்பாட்டுக்குத் திறக்கின்றோம் என்று சமாதானம் கூறுவது பொருத்தமான காரணமாக இருக்காது.

தினசரி தொற்றாளர் அடையாளம் காணும் எண்ணிக்கை மீண்டும் இரண்டாயிரத்தை எட்டியுள்ளது. தனிப்பட்ட முறையில் அன்டிஜன் பரிசோதனை செய்து தொற்றாளர்கள் எனக் காணப்படுவோர் சுகாதார அதிகாரிகளின் கண்காணிப்புக்குள் வராமலேயே வீடுகளில் தம்பாட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றனர். கொரோனாவுக்கான அறிகுறி கொண்ட பலரும் இதே பாணியை பின்பற்றுகின்றனர்.

இந்தப் பின்புலத்தில் நிலைமை கட்டுக்குள் வந்து விட்டதாக அவசரப்பட்டுக் கருதி, அதிகப்பிரசங்கித்தனமாக அரசு முடிவுகளை எடுக்காமல், சுகாதார மற்றும் வைத்திய துறை அதிகாரிகள், நிபுணர்கள் சம்பந்தப்பட்ட பிற தரப்பினருடன் கலந்தாலோசித்து, அவர்களின் அனுசரணையுடன் தீர்மானங்களை மேற்கொள்வது உசிதமானது.

# மனித உரிமை ஆணைக்குழு எங்களை விலை பேசுகின்றது

## காணாமற்போனோர் உறவுகள் குற்றச்சாட்டு

மனிதஉரிமைஆணைக் குழு தங்களை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறு விலை பேசுவதாக மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்று (வெள்ளிக் கிழமை) காலை, மன்னார் பஜார் பகுதியில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி இம்மானுவேல் உதயச்சந்திரா, எங்களது தொடர்ச்சியான போராட்டத்துக்கு அரசாங்கத்தால் இதுவரை எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை.

இலங்கை அரசாங்கம் இதற்கான தீர்வை வழங்காது என்பதால்தான் சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகிறோம்.

இதேவேளை மனித உரிமை ஆணைக்குழு, இன்று எங்கள் ஒவ்வொருவருக்கும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறு விலை பேசுகின்றது.

அரசாங்கத்துடன் இணைவதால் எங்களுக்கு எந்த நன்மையும் இல்லை என்பதால்தான் நாங்கள் தனித்து போராடுகின்றோம். என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பெருந்தொகை நாணயத்தாள் அச்சிடுவதால் இலங்கையின் பண வீக்கம் அதிகரிக்காது!

## நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல இப்படி கருத்து



பெருந்தொகை ரூபா நாணயத்தாள்களை அச்சிடுவதன் மூலம் இலங்கையின் பணவீக்கம் அதிகரிக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல இதனைத் தெரிவித்துள்ளார்.

இணையத்தின் ஊடாக இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்தக் கருத்தை நேற்று வெளியிட்டுள்ளார். கடந்த நாள்களில் டிரில்லியன் பெறுமதியான ரூபா தாள்கள் அச்சிடப்பட்டன எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இது தற்போதைய டொலர் கையிருப்பு பிரச்சினையை தீர்க்காது என்று எதிர்க்கட்சி சுட்டிக் காட்டியிருந்தது.

இந்த நிலையிலேயே நிதி அமைச்சு செயலாளரின் கருத்து வெளியாகியுள்ளது. அதன்படி, மத்திய வங்கி டொலர்களை தரும் போது அதற்கு ஈடாக நிதியமைச்சு ரூபாவை வழங்குகிறது. மத்திய வங்கி அதனை ஒதுக்கங்களை பயன்படுத்தி செலுத்தும். எனவே அதிக நாணயத்தாள் அச்சிடப்படுவது பண நிரம்பலில் தாக்கத்தை ஏற்படுத்தாது என்று ஆட்டிகல குறிப்பிட்டுள்ளார்.

# செல்வச்சந்நிதி ஆலயப் பெருந்திருவிழா சுகாதார விதிமுறைகள் வெளியிடப்பட்டன



வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் திருவிழாக்களில் பின்பற்றப்பட வேண்டிய சுகாதாரக் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு கடந்த புதன்கிழமை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

பெருந்திருவிழாவை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படாத நிலையில் ஆலய உள் வீதியில் மட்டுமே வழிபாடுகள் மற்றும் சமய நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெளிப்புறச் சூழலில் எந்தவிதமான சமய நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் மற்றும் நேர்த்திக்கடன் நிறைவேற்றுதல் என்பவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு சிறப்பு தனியார், அரச பஸ்கள் சேவைகள் ஈடுபட அனுமதியில்லை என்பதுடன் வெளியூர் பக்தர்கள் பங்கேற்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஆலயச் சுற்றாடலிலுள்ள வீதிகளில் மண்டகப்படி வைத்தல், பிரசாதம் வைத்தல், தாக சாந்தி, அன்னதானம் வழங்கல் என்பனவற்றுக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் நிலவுகின்ற கொரோனாத் தொற்றைக் கருத்திற்கொண்டு அங்கப்பிர தட்சணம் செய்தல், அடி அழித் தல், கற்பூரச் சட்டி எடுத்தல், காவடி, தூக்குக் காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக் கடனை மேற்கொள்ளவும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.


ஆலயச் சுற்றாடல் மற்றும் ஆலயத்தை அண்டிய பகுதியில் அடியவர்கள் மற்றும் பொதுமக்கள் கூடுவதற்கான தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசை அரங்குகள், கலை நிகழ்வுகள் மற்றும் பொழுதுபோக்குக்கான அனைத்து நிகழ்வுகளும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை இந்த ஆண்டு நீர்ப்பாசனத் திணைக்கள பாலத்துடனான போக்குவரத்து இடம்பெறாது என்றும் அடியவர்கள் நீண்ட நேரம் ஆலயத்தில் தரித்து நிற்பதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஆலய வழிபாடுகளின்போது ஆலயச் சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார விதிமுறைகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பெரியம்மை போல டெல்டா வைரஸ் எளிதாகப் பரவும்

## அமெரிக்கா அறிக்கை



இந்தியாவில் பி.1.617.2 என்ற உருமாறிய கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸுக்கு டெல்டா வைரஸ் என உலக சுகாதார அமைப்பு பெயர் சூட்டி உள்ளது. இந்த வைரஸ்தான் இந்தியாவில் கொரோனாவின் 2ஆவது அலையில் அதிக கைவரிசை காட்டியது.

டெல்டா வைரஸ், உலகின் 100 நாடுகளுக்கு மேல் பரவிவிட்டது. எதிர்காலத்தில் இது இன்னும் தீவிரமாக தாக்கும் வாய்ப்பு உள்ளதாக உலக சுகாதார அமைப்பு ஏற்கனவே எச்சரித்துள்ளது.

இந்த நிலையில் அமெரிக்காவில் உள்ள சி.டி.சி. என்னும் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்களின் அறிக்கை ஊடகங்களில் கசிந்துள்ளன. அதில் பல முக்கிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன. அவை வருமாறு:

டெல்டா வைரஸ் பெரியம்மை போல எளிதாகப் பரவும், கடுமையாக பாதிக்கும். மேலும், தடுப்பூசி போடாதவர்கள் என்ன வேகத்தில் பரப்புவார்களோ, அதே வேகத்தில் 2 டோஸ் தடுப்பூசி போட்டவர்களும் டெல்டா வைரஸை பரப்புவார்கள்.

இது மெர்ஸ், சார்ஸ், எபோலா, ஜலதோஷம், பருவ காய்ச்சல், சிற்றம்மை போல வேகமாக பரவுகிற வைரஸ் ஆகும். இது பெரியம்மை போல தொற்றும்.

அதே நேரத்தில் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள் பாதுகாப்பானவர்கள். தடுப்பூசிகள் நோய்த்தொற்றின் 90 சதவீத தீவிரத்தை தடுக்கிறது. ஆனால் தொற்றைத் தடுப்பதிலும், பரப்புவதிலும் குறைவான செயல்திறனைத்தான் கொண்டுள்ளன.

இவ்வாறு அந்த அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

இதுபற்றி சி.டி.சியின். இயக்குநர் டாக்டர் ரோச்செல்லி வாலன்ஸ்கை கூறுகையில், 2 டோஸ் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள், தொற்று பாதிப்புக்குள்ளாகிறபோது, தடுப்பூசி போடாமல் தொற்று பாதிப்புக்குள்ளாகிறவர்கள் போலவே மூக்கிலும், தொண்டையிலும் அதிகளவிலான வைரஸை சுமந்து செல்வார்கள் என தெரிவித்தார்.

டாக்டர் ரோச்செல்லி வாலன்ஸ்கை சி.என்.என். டெலிவிஷனுக்கு அளித்த பேட்டியில், சிற்றம்மை, பெரியம்மை போல மிகவும் பரவுகிற வைரஸ் டெல்டா வைரஸ். பள்ளிக்கூடங்களில், மாணவர்கள், ஊழியர்கள், வருகிறவர்கள் என அனைவரும் கண்டிப்பாக முகக்கவசத்தை எல்லா நேரமும் அணிந்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார்.

## ஆப்கானிஸ்தானில் ஐ.நா அலுவலகம் மீது தாக்குதல் தலிபான்கள் தாக்குதல்




ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளுக்கும், அரசுக்கும் இடையே நீண்டகால போர் நடைபெற்று வருகிறது. இதனை முடிவுக்கு கொண்டுவர அமைதி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. எனினும் பல சுற்று முடிவில் உடன்பாடு எட்டப்படவில்லை. அரசுக்கு ஆதரவாக அமெரிக்காவின் நேட்டோ படைகள் செயல்பட்டு வருகின்றன.

இதற்கிடையே, ஆப்கானிஸ்தான் நாட்டில் இருந்து படைகளை விலக்கிக் கொள்வது என அமெரிக்க அரசு முடிவு செய்தது. எனினும், திட்டமிட்டபடி கடந்த 1ஆம் தேதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு பதிலாக தள்ளிப்போனது. இதன்பின் அந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

## சோமாலியாவில் குண்டு வெடிப்பு கால்பந்து வீரர்கள் 4 பேர் உயிரிழப்பு

அல் கொய்தா தீவிரவாத இயக்கத்தின் ஆதரவாளர்களாக சோமாலியா நாட்டில் இயங்கிவரும் அல் பாப் தீவிரவாதிகள் அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டின் சில பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திவரும் இவர்கள் அவ்வப்போது வன்முறைத் தாக்குதல்களை நடத்தி பலரைக் கொன்று குவித்தும் வருகின்றனர்.

சோமாலியாவில் நீண்ட இழுபறிக்குப் பிறகு தேர்தல் தொடங்கியுள்ளது. முதல் மாகாணமாக ஜுபாலந்த் பகுதியில் வாக்குப்பதிவு இந்த வாரம் தொடங்கியது. தேர்தலை இடையூறு செய்வோம் என்று அல் பாப் குழுவினர் மிரட்டல் விடுத்திருந்தனர்.

இந்நிலையில், சோமாலியா நாட்டில் கிளப் அணிகளுக்காக விளையாடும் கால்பந்து வீரர்கள் ஒரு பேருந்தில் சென்று கொண்டிருந்தனர். அப்போது திடீரென அந்த பேருந்து மீது வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் கால்பந்து வீரர்கள் 4 பேர் கொல்லப்பட்டனர். 5 பேர் படுகாயம் அடைந்தனர். சோமாலியாவின் தெற்கு பகுதியில் உள்ள கிஸ்மாயோ நகரத்தில் உள்ள மைதானத்திற்கு கிளப் போட்டியில் பங்கேற்க சென்றபோது இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பேற்கவில்லை.

INDIVIDUAL ENGLISH CLASSES
K. GANESH (BA. Pera)
அடிப்படையில் இருந்து ஆங்கிலம் பேச விரும்புவோர்
Grammar - Spoken
English Medium
செய்பவர்கள்
Grade - from 7 to 11 வரை
பட்டதாரிகள்,
தொழில் புரிபவர்கள்
077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

## பெருவில் 6.1 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்



பெரு நாட்டின் சுல்லானா நகருக்கு கிழக்கே 8 கி.மீ. தொலைவில் நேற்று மாலை 5.10 மணியளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இது ரிக்டரில் 6.1 ஆக பதிவாகி உள்ளது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கம் 33.18 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை.

எனினும், சிறிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளன என கூறப்படுகிறது. நிலநடுக்க அதிர்வால் பெரு நாட்டு மக்கள் அச்சத்தில் வீதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். வீடுகளில் வைக்கப்பட்டிருந்த பொருள்களில் சில கீழே விழுந்துள்ளன.

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500



# கொரோனா விழிப்புணர்வு பிரசாரத்தை ஆரம்பித்து வைத்தார் முதல்வர் ஸ்டாலின்




கொரோனா பெருந்தொற்றை தவிர்க்கும் நோக்கில், விழிப்புணர்வு பிரசாரத்தை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசின் கொரோனா விழிப்புணர்வு தொடர் பிரசார விழா, முதல்வர் ஸ்டாலின் தலைமையில் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. இதில், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், சேகர்பாபு மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் கொரோனா தொடர்பான விழிப்புணர்வு வாசகங்களை தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் வாசிக்க அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். அதனைத்தொடர்ந்து கொரோனா விழிப்புணர்வு கண்காட்சியை முதல்வர் தொடங்கி வைத்தார்.

மூன்றாவது அலையை தவிர்க்கும் வகையில் விழிப்புணர்வு காணொலியை வெளியிட்டு, கையெழுத்து இயக்கத்தையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கினார். இறுதியாக, பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செயல்படவிருக்கும் எல்.இ.டி பொருந்திய வாகன பிரசாரத்தை மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.




## தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையில் ஒக்சிஜன் உற்பத்தி நிறுத்தப்பட்டது

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையில் மேற்கொள்ளப்பட்டு வந்த ஒக்சிஜன் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றம் அளித்த அனுமதி நாளையுடன் முடிவடையும் நிலையில் இன்றே ஒக்சிஜன் உற்பத்தியை நிறுத்தியது ஸ்டெர்லைட் ஆலை. தற்போது ஒக்சிஜன் பற்றாக்குறை இல்லை என்பதால் உற்பத்தியை நீடிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று ஏற்கனவே தமிழக அரசு நீதிமன்றில் தெரிவித்துவிட்டது.

இந்த சூழலில் ஒக்சிஜன் உற்பத்திக்கு தொடர்ந்து அனுமதி வழங்கக்கோரி உச்சநீதிமன்றத்தில் வேதாந்தா நிறுவனம் மனு செய்துள்ளது. மேலும் ஸ்டெர்லைட் ஆலைக்கு 2 மெகாவாட் மின்சாரம் வழங்கவும் தமிழக அரசுக்கு வேதாந்தா நிறுவனம் கோரிக்கை வைத்துள்ளது.

ஒக்சிஜன் உற்பத்திப் பிரிவை தொடர்ந்து இயக்கும் நிலையில் வைத்திருக்க, தொடர்ந்து மின்சாரம் வழக்க வேண்டும் என்றும் அந்த நிறுவனத்தினர் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

## சென்னையில் இன்று முதல் 9 இடங்களில் வணிக நிறுவனங்களை மூட உத்தரவு



கொரோனாத் தடுப்பு முன்னெச்சரிக்கையாக சென்னையில் 9 இடங்களில் கடைகள், வணிக வளாகங்கள் செயல்பட மாநகராட்சி தடை விதித்துள்ளது. இந்த உத்தரவு இன்று முதல் ஒகஸ்ட் 9ஆம் திகதி காலை வரை அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் அதிகம் கூடும் பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ள ரங்கநாதன் தெரு சந்திப்பில் வடக்கு உஸ்மான் சாலை முதல் மாம்பலம் ரயில் நிலையம் வரை, புரசைவாக்கம் டவுட்டன் சந்திப்பு முதல் புருக்லின் சாலை வரை, ஜாம் பஜார் பாரதி சாலை ரத்னா கஃபே சந்திப்பு முதல் பெல்ஸ் சாலை சந்திப்பு வரை கடைகள் திறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஃபக்கி சாஹிப் தெரு, அபிபுல்லா தெரு, புலிபோன் பஜார், என்.எஸ்.சி போஸ் சாலையில் குறளகம் முதல் தங்க சாலை சந்திப்பு வரை, ராயுபுரம் மார்க்கெட் பகுதியில் கல்மண்டபம் சாலை, வாட்டர் டாங்க் முதல் காமாட்சி அம்மன் கோவில் வரை கடைகள் திறக்க அனுமதியில்லை. அமைந்தகரை மார்க்கெட் பகுதியில் பூந்த மல்லி நெடுஞ்சாலை அமைந்தகரை காவல் உதவி மையம் முதல் புல்லா அவென்யூ திரு.வி.க.நகர் பூங்கா சந்திப்பு வரை மற்றும் ரெட்ஹில்ஸ் மார்க்கெட் பகுதியில் ஆஞ்சநேயர் சிலை முதல் அம்பேத்கர் சிலை வரை உள்ள வணிக வளாகங்கள், கடைகள் திறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் ஒகஸ்ட் 9ஆம் திகதி காலை 6 மணி வரை இந்த உத்தரவு அமுலில் இருக்கும் என சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது. மேலும், கொத்தவால்சாவடி சந்தை நாளை முதல் ஒகஸ்ட் 9ஆம் திகதி காலை 6 மணி வரை செயல்பட அனுமதி இல்லை என்றும் வணிகர் சங்க பிரதிநிதிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெல்லியில் அரசியல் வியூகம் வகுக்கும் மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி

டெல்லியில் 5 நாள்கள் தங்கிய மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களையும் சந்தித்தார். இந்த பயணத்தின் போது, ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளரும் டெல்லி முதல் மந்திரியுமான அரவிந்த் கெஜ்ரிவால், காங்கிரஸ் மூத்த தலைவர்கள் கமல்நாத், ஆனந்த் சர்மா, அபிஷேக் மனு சிங்கி, தி.மு.க. கனிமொழி. உள்ளிட்டோரையும் மம்தா பானர்ஜி சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

மம்தா டெல்லியில் தீவிரமாக பயணித்துக் கொண்டிருந்தபோது கருத்துக்கணிப்பு வியூக நிபுணரான பிரசாந்த் கிஷோர், தினமும் மதிய உணவின்போது மம்தா பானர்ஜியை சந்தித்தார். நான்கு நாள்களும், கிஷோர் மம்தாவுடன் அமர்ந்து இந்த மதிய உணவு வேளையின்போது அன்றைய நிகழ்ச்சிகள் குறித்து விவாதித்தார்.

மம்தா டெல்லியில் புதிதாக அரசியலுக்கு வந்தவர் அல்ல. ஏழு முறை எம்.பியாக இருந்தவரும் மூன்றாவது முறையாக முதல் மந்திரியாகியுள்ளவரும், நரசிம்ம ராவ் மந்திரி சபையில் மத்திய அமைச்சராக இருந்தவரும், டெல்லி அரசியலை நன்கு புரிந்துகொண்டுள்ளவருமான மம்தா பானர்ஜி அரசியல் கணிப்பாளரோடு சந்திப்புகளை மேற்கொண்டமை டெல்லி அரசியல் வட்டாரத்தில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தியுடனான சந்திப்பின்போது செய்தியாளர்களிடம் பேசிய மம்தா பானர்ஜி, நான் எதிர்க்கட்சிகளை வழிநடத்தும் தலைவராக இருக்க விரும்பவில்லை. ஒரு சாதாரணத் தொண்டராகத் தெருவில் இருக்கும் சாமானிய பிரஜையாக இருந்து அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் நான் உதவவே விரும்புகிறேன். பா.ஜ.கவைத் தோற்கடிக்க எல்லோரும் இணைய வேண்டும். அதை நோக்கி மட்டுமே என்னுடைய அடுத்தடுத்த அரசியல் நகர்வுகள் இருக்கும் எனத் தெரிவித்திருக்கிறார்.



# எல்லை மீள்நிர்ணயம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை



மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் 29 ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் மாவட்டஅரசாங்கஅதிபர்கே.கருணாகரன்தலைமையில் நடைபெற்றது.இக் கூட்டத்தில் மாவட்டத்தில் அமுல் படுத்தப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கான மீளாய்வு புதிய திட்ட முன்மொழிவு என்பன தொடர்பாக ஆராயப்பட்டது.

இங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அஹமட் – மாவட்டத்தின் எல்லை மீள் நிர்ணயம் தொடர்பான அறிக்கைகளை அலுவலக ரீதியாக மாவட்டச் செயலகத்தினால் அபிவிருத்திக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் சிபாரிசு செய்து அனுப்புவது என்றும் தீர்மானிக்கப்பட்ட போது எமது பிரதேச மக்களின் எல்லை மீள் நிர்ணயம் தொடர்பான அறிக்கைகளில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை ஏறாவூர் நகர், பிரதேச செயலகம் கோறளைப்பற்று மத்தி, காத்தான்குடி, கோறளைப்பற்று மேற்கு, போன்ற பிரதேச செயலகங்களினாலும் அப்பிரதேச மக்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லை மீள் நிர்ணயத்தை எவ்வித மாற்றமும் இன்றி மாவட்ட செயலகம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் உறுதியாகவும் தெளிவாகவும் தெரிவித்தார் . அதன்படி இதனை அனுப்பி வைப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

## போதைப்பொருள் வியாபாரத்தை தடுக்க மக்களும் பொலிஸாரும் கலந்துரையாடல்



மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பகுதியில் போதைப்பொருள் வியாபாரம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக அப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் அதிகரித்து வரும் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் நேற்று பிறைந்துறைச்சேனை முகைதீன் தைக்கா பள்ளிவாசலில் விசேட கூட்டமொன்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்ட மக்கள் போதைப் பொருள் விற்பனையை இல்லாமல் செய்ய அதிகாரிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிறைந்துறைச்சேனை பகுதியில் போதைப்பொருள் விற்பனை நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றன. போதை மாத்திரை விற்பனை செய்தவர்கள் ஐஸ் போதைப் பொருளும் கஞ்சா விற்பனை செய்தோர் கேரளா கஞ்சாவும், ஹெரோயினும் விற்பனை செய்து வருகின்றனர். அவர்களின் தொழில் ஒவ் வொரு நாளும் அபிவிருத்தியடைந்தே செல்கின்றது என்று அங்கு வந்த மக்கள் தங்களுடைய ஆதங்கங்களை அதிகாரிகள் முன் தெரிவித்தனர்.

இவ்வாறு போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் நபர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு அரசாங்கம் மற்றும் நிறுவனங்கள் வழங்கும் உதவிகளை நிறுத்த வேண்டும் என்றும் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

## மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு எதிராக ஆளுநருக்கு கடிதம்

*மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, இடமாற்ற கட்டளை பெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களை விடுவிப்பு செய்ய மறுத்து வருவத னால் இது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநருக்கு கடிதமொன்றினை அனுப்பிவைத்துள்ளோம் என அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் தலைவர் ஏ.ஜீ.முபாறக் தெரிவித்துள்ளார்.*

*இவ்வாறு விடுவிக்கப்படாமல் இருந்து வரும் குறித்த உத்தியோகத்தர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.*

*இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநருக்கும், பிரதம செயலாளருக்கும் அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கம் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதுடன், இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநரை எதிர்வரும் நாள்களில் நேரடியாக சந்திப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.*

## காரைதீவில் மக்களின் நலன் கருதி நடமாடும் கொரோனாத் தடுப்பூசி சேவை

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வஸீரின் தலைமையில் நடமாடும் தடுப்பூசி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த டாக்டர் தஸ்லிமா வஸீர், வீட்டில் இருந்து தடுப்பூசி மையங்களுக்கு வர முடியாதவர்கள் அந்தந்த பகுதி பொதுச்சுகாதார மாதுகளிடமோ அல்லது பொது சுகாதார உத்தியோகத்தர்களிடமோ அவர்களின்பெயர்களைபதிவுசெய்துவீட்டிலேயே தடுப் பூசிகளை பெற்றுக் கொள்ள முடியும். காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பகுதியில் 75% மக் கள் ஏற்கனவே தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டனர் . சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர் அவர்களின் ஆலோசனைக்கு அமைய வீட்டிலிருந்து வரமுடியாதவர்களுக்கு காரைதீவு சுகாதார வைத்தியஅதிகாரிஅலுவலகஉத்தியோகத்தர்கள் வீடுகளுக்குச்சென்றுகோவிட்-19தடுப்பூசிகளை நேற்றுவழங்கியுள்ளனர்என்பதுகுறிப்பிடத்தக்கது.



## நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசனால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு

நாட்டில் நிலவுகின்ற கொவிட் நிலைமையினால் பாதிப்புற்ற வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் செயற்திட்டம் நாவிதன்வெளி பிரதேசபை உறுப்பினர் திருமதி பார்தீபன் தர்சினியின் ஏற்பாட்டில் நாவிதன்வெளியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மற்றும் நாவிதன்வெளி 2 கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வே.இராஜகோபால் உட்பட பயனாளிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினரின் வேண்டுகோளுக்கு அமைவாக நாவிதன்வெளி பிரதேசத்தைச் சேர்ந்த ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இராஜகோபால் அருண், சந்திரசேகரம் தீபன் மற்றும் சிவலிங்கம் சுகதாஸ் ஆகியோரின் நிதியுதவியின் மூலம் மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 40 குடும்பங்களுக்கு உதவி வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து இசுரு உதான ஓய்வு

இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான இசுரு உதான சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறேன் என அறிவித்துள்ளார்.

33 வயதான இசுரு உதான சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதற்கான தனது முடிவை கடிதம் மூலம் நிர்வாகத்திடம் அறிவித்துள்ளதனை இலங்கை கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

இசுரு உதான இதுவரை 21 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 18 விக்கெட்டுகளையும் 237 ஓட்டங்களையும் எடுத்திருக்கிறார். அதேபோன்று 34 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ள அவர், 27 விக்கெட்டுகளையும் 256 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

புதிய தலைமுறையினருக்கு இடம்கொடுத்து விலக விரும்பியதால் இந்த முடிவை எடுத்தேன் எனவும், உள்ளூர் மற்றும் சர்வதேச கழக மட்டப்போட்டிகளில் தொடர்ந்து விளையாடவுள்ளேன் எனவும் அவர் தன்னுடைய சர்வதேச கிரிக்கெட்டிலிருந்தான ஓய்வுபற்றிய தகவலில் குறிப்பிட்டிருக்கிறார்.

## இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் பென் ஸ்டோக்ஸ் சடுதியான தற்காலிக ஓய்வை அறிவித்தார்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான பென் ஸ்டோக்ஸ், அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் தற்காலிகமாக காலவரையற்ற ஓய்வினை எடுத்துக் கொள்கிறேன் என அறிவித்துள்ளார்.

'அழுத்தங்களுக்கு உள்ளாகியிருக்கும் அவரது மனநலத்திற்கு முன்னுரிமை அளிப்பதற்கும், அவரது இடது ஆள்காட்டி விரல் காயம் குணமடைவதற்கும் இந்த ஓய்வு முடிவினை அவர் எடுத்துள்ளார்' என இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபையின் ஊடக அறிக்கைதெரிவித்துள்ளது.

பென் ஸ்டோக்ஸின் இந்த முடிவையடுத்து அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ள இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும் இங்கிலாந்து அணியில் அவருக்குப் பதிலாக கிரெய்க் ஓவர்டொன் சேர்க்கப்படவிருக்கிறார்.

அண்மையில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரில், இங்கிலாந்தின் இளம் ஒருநாள் அணியின் தலைவராக செயற்பட்ட பென் ஸ்டோக்ஸ், புதிதாக ஆரம்பமாகியுள்ள 'த ஹன்ட்ரட்' கிரிக்கெட் தொடரில் நொதர்ன் சூப்பர்சார்ஜர்ஸ் அணிக்காக விளையாடியிருந்தார்.



பென் ஸ்டோக்ஸின் ஓய்வு முடிவு குறித்து கருத்துத் தெரிவித்த இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் இயக்குநர் அஷ்லி ஜைல்ஸ், பென்னுக்குத் தேவையான அளவு ஓய்வினை அளிப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம். குடும்பத்தினரை விட்டு நீண்ட நாள்கள் கடுமையான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் இருப்பது வீரர்களுக்கான அழுத்தங்களை அதிகரிக்கிறது. அவர்களுடைய உடல், உள நலன்களே எமக்கு முக்கியம். ஓய்வுக்குப் பின்னர் விரைவிலேயே இங்கிலாந்து அணியில் இணைந்து அவர் விளையாடுவார் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று கூறியிருக்கிறார்.

இங்கிலாந்துக்குச் சென்றுள்ள விராட் கோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி நொட்டிங்காமில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கு சர்வதேசப் போட்டிகளில் ஓராண்டுத் தடை!

இலங்கை கிரிக்கெட் வீரர்களான தனுஷ்க குணதிலக, குசல் மெண்டிஸ் மற்றும் நிரோஷன் டிக்வெல்ல ஆகியோருக்கு சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடுவதற்கு ஓராண்டுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், குறித்த மூன்று வீரர்களும்உள்நாட்டுகிரிக்கெட்டில்விளையாடுவதற்கும் ஆறு மாதங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் உயிர்ப் பாதுகாப்புக் குமிழியை மீறியதற்காக, இவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென பல தரப்பில் இருந்தும்அழுத்தங்கள்கொடுக்கப்பட்டநிலையில், தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையிலேயே இவர்கள் நாட்டுக்கு வரவழைக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதனைத்தொடர்ந்து இவர்கள் மீது விசாரணையைத் தொடங்கிய இலங்கை கிரிக்கெட் சபை, 5 உறுப்பினர்களைக்கொண்டசிறப்புவிசாரணைக் குழுவை நியமித்திருந்தது.

இந்த சிறப்பு விசாரணைக் குழு, முன்னதாக தனுஷ்க குணதிலக மற்றும் குசல் மெண்டிஸ்



ஆகியோருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு அனைத்து வகையான கிரிக்கெட்டிலும் ஈடுபடத் தடை விதிக்குமாறும் நிரோஷன் டிக்வெல்லவை அனைத்து வகையான கிரிக்கெட்டுகளிலிருந்தும் 18 மாதங்கள் இடைநீக்கம் செய்யுமாறும் வலியுறுத்தியிருந்தது. அத்துடன் 25,000 அமெரிக்க டொலர்கள் அபராதம் செலுத்த வேண்டுமெனவும் கூறியிருந்தது.

ஆனால், தற்போது இந்தத் தண்டனை விவரம் மாற்றியமைக்கப்பட்டு, அவர்களுக்கு சர்வதேச கிரிக்கெட்டில் ஓராண்டுத் தடையும் உள்ளூர் கிரிக்கெட்டில் ஆறு மாதத் தடையும் 1 கோடி இலங்கை ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.






## ஒரேநாளில் 4 தங்கம் வென்ற சீனா பதக்கப்பட்டியலில் முதலிடம் பிடித்தது

ஒலிம்பிக் போட்டியின் 8 ஆவது நாளில் சீனா 18 தங்கப்பதக்கங்களுடன் மீண்டும் முதல் இடத்தைப்பிடித்துள்ளது. ஒரே நாளில் சீனா 4 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

டோக்கியோ ஒலிம்பிக் பதக்கப்பட்டியலில் ஆரம்பித்த முதல் நாளில் சீனாதான் முதல் இடத்தில் இருந்தது. நேற்று முன்தினம் காலை நிலைவரப்படி அமெரிக்கா பதக்கப்பட்டியலில் முன்னிலை பெற்றிருந்தது. ஆயினும், நேற்று மாலை 6 மணி நிலைவரப்படி போட்டியை நடத்தும் ஜப்பான் முதலிடம் பிடித்தது.

நேற்றைய 8 ஆவது நாளில் சீனா 18 தங்கப் பதக்கங்களுடன் முதல் இடத்திற்கு சீனா முன்னேறியுள்ளது. ஒரே நாளில் சீனா 4 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று மாலை நிலைவரப்படி சீனா 18 தங்கம், 9 வெள்ளி, 11 வெண்கலம் என மொத்தம் 38 பதக்கங்களுடன் முதல் இடத்திலும், ஜப்பான் 17 தங்கம், 4 வெள்ளி, 7 வெண்கலம் என மொத்தம் 28 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும், அமெரிக்கா 14 தங்கம், 16 வெள்ளி, 11 வெண்கலம் என மொத்தம் 41 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு






# பாரபட்சங்கள் எவையும் பார்க்காமல் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்

## சஜித் வலியுறுத்தல்

பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை பாரபட்சம் பார்க்காமல் தண்டிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸதெரிவித்துள்ளார்.


எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது சஜித் பிரேமதாஸ மேலும் கூறியுள்ளவை வருமாறு – ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் பணிபுரிந்த 16 வயது சிறுமியின் மரணம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தச் சம்பவத்தில் எந்தவொரு குறுக்கீடும் இல்லாத வகையில் கடுமையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதன் மூலம் அடையாளம் காணப்பட்ட குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும். தேவையான சட்ட விதிகளை அமுல்படுத்துவதன் மூலம் பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளை வலுப்படுத்துவது அரசாங்கம் உட்பட அனைவரினதும் பொறுப்பாகும். பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளைப் பாரபட்சம் பார்க்காமல் தண்டிக்க வேண்டும் என்பதே எதிர்க்கட்சியின் நோக்கமாகும். –என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஹிஷாலினியின் மரணம் தொடர்பான உண்மைகளை மறைக்கக்கூடாது!

## சோபித தேரர் காட்டத்துடன் தெரிவிப்பு



நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய சிறுமியின் மரணம் தொடர்பான உண்மைகளை மறைக்க அனுமக்கக்கூடாது என சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சோபித தேரர் மேலும் கூறியுள்ளவை வருமாறு–


இத்தகைய சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் உடனடியாக நாடாளுமன்றில் இருந்தும் வெளியேற்றப்பட வேண்டும் .

மேலும் இதேபோன்ற சம்பவங்கள் தொடர்பாக தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு ஆணைக்குழு, பொலிஸார் மற்றும் அதிகாரிகள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்பவர்கள், கொலைகாரர்கள் மற்றும் திருடர்கள் போன்ற குற்றவாளிகள் நாடாளுமன்றத்தை தங்கள் அதிகார இடமாக மாற்றியுள்ளனர்.

அத்தோடு ரிஷாத் பதியுதீன் போன்றவர்களுக்காக நாடாளுமன்றத்தில் உள்ள அனைவரும் வெட்கப்பட வேண்டும்.

இதேவேளை ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய சிறுமியின் மரணத்தை மறைக்க சதித்திட்டம் இடம்பெறுவதாக சிங்களே அமைப்பின் மெடில்லே பஞ்சாலோக்க தேரர் தெரிவித்துள்ளார். மேலும் சிறுமியின் மரணம் தொடர்பான முதல் பிரேத பரிசோதனையில் வசீம் தாஜுதீனின் பிரேத பரிசோதனைக்கு விசுவாசமாக இருந்தவர்கள் ஈடுபட்டுள்ளனர். என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# தீ விபத்துக்குள்ளான கப்பல் 473 கடல் உயிரினங்கள் சாவு

இலங்கை கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான கப்பலால் ஏற்பட்ட பாதிப்புகளால் 473 கடல் உயிரினங்கள் மரணித்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாக கொழும்பு நீதிவான் நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

அதற்கமைய குறித்த பாதிப்புகளால் இதுவரையில் 417 ஆமைகளும், 48 டொல்பின்களும், 8 திமிங்கிலங்களும் உயிரிழந்துள்ளன என சட்டமா அதிபர் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தை அண்மித்த பகுதியில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்துக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் சரத் வீரசேகரவின் கீழிருந்த முக்கிய நிறுவனங்கள் ஜனாதிபதி வசம்!

அமைச்சர் சரத் வீரசேகரவின் பொது பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள இரண்டு நிறுவனங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த கையகப்படுத்தல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, சரத் வீரசேகரவின் கீழ் இருந்த சிவில் பாதுகாப்புத் துறை மற்றும் பல்நோக்கு மேம்பாட்டு பணிக்குழு ஆகியவை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கை மூலம், சரத் வீரசேகரவின் அமைச்சரவை அமைச்சு மட்டுமே இலங்கை காவல்துறை மற்றும் தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தில் விடப்படும்.

# இலங்கையில் மேலுமொரு நீலக்கல் கொத்தனி மீட்பு

## சீன ஏலத்திற்கு செல்வதாக தகவல்

இலங்கையின் இரத்தினபுரி பகுதியிலிருந்து மற்றுமொரு நீலக்கல் கொத்தணி மீட்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இரத்தினபுரி, இறக்குவானை பிரதேசத்திலிருந்தே 80 கிலோகிராம் நிறையுடைய குறித்த நீலக்கல் கொத்தணி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த நீலக்கல் கொத்தணி இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன்பெறுமதி சுமார் 5 கோடி அமெரிக்க டொலராக இருக்கும் என அதன் உரிமையாளர் தெரி வித்துள்ளார். இதனை சீனாவில் எதிர்வரும் நவம்பரில் இடம்பெறவுள்ள ஏலத்தில் விற்பனை செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, இரத்தினபுரி, கஹவத்த பிரதேசத்தில் உலகிலேயே மிகப்பெரிய நீலக்கல் கொத்தணியொன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# லிந்துலை பகுதியில் விபத்து இலங்கையின் நடிகை பலி

தலவாக்கலை –லிந்துலை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையின் மூத்த நடிகை ஹயசிந்த் விஜேரத்ன உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் உயிரிழக்கும் போது வயது 75 ஆகும். நுவரெலியா – தலவாக்கலை வீதியின் லிந்துலை பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் இருந்து கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், லிந்துலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# அமெரிக்க இராணுவ முன்னாள் அதிகாரிகள் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்?

இலங்கையில் இரகசிய நடவடிக்கைகளில் அமெரிக்க இராணுவ முன்னாள் அதிகாரிகள் ஈடுபட்டமை குறித்து இராணுவப் புலனாய்வு ஒரு விரிவான விசாரணையைத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், விசாரணை தொடங்கிய சிறிது காலத்தில் முன்னாள் அமெரிக்க இராணுவ அதிகாரி புக்கரெஸ்டுக்கு தப்பிச் சென்றுள்ளார் எனவும் அந்தந் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மியன்மார் இராணுவப் புரட்சிக்குப் பிறகு அவர் இலங்கைக்கு வந்துள்ளார். அவரைத் தவிர, ஒரு நைஜீரிய நாட்டவர் இலங்கையில் ஒரு மர்மமான திட்டத்தில் பணியாற்றி வருகிறார் என கூறப்பட்டுள்ளது.

குறித்த இராணுவ முன்னாள் அதிகாரிகள் சுற்றுலா விசாவில் நாட்டுக்கு வந்திருக்கின்றனர் என உளவுத் துறை தெரிவித்துள்ளது என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.07.2021இல் வெளியிடப்பெற்றது.